கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. இராமசாமி, என்னுடைய விளக்கத்தைத் தெளிவாக உங்களுக்குச் சொல்லிவிட்டேன். எந்தச் சூழ்நிலையில் நான் இந்த நடவடிக்கை எடுத்தேன் என்ற என்னுடைய சூழ்நிலையை தெளிவாகச் சொல்லிவிட்டேன். அதற்குமேலும், என்னுடைய விளக்கத்தை இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவு பெரிய விளக்கத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, இந்த அளவோடு இந்தப் பிரச்சினையை முடித்துக்கொண்டு, அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு தாருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதற்குமேல் வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் அடுத்த அலுவலுக்குச் செல்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

நில அளவைக்கு நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறீர்களா இல்லையா?*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *இல்லையில்லை, கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொண்டு வருகிறீர்களா, இல்லையா? கொண்டு வரவில்லை என்றால் விட்டுவிடுங்கள். (குறுக்கீடு)* Right, OK. *(குறுக்கீடு)*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொண்டு வரவில்லை என்றால் விட்டுவிடுங்கள், அவ்வளவுதான். நான் ஒன்றும் சொல்ல முடியாது.*